பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 21 ஸபர் 12 இதழ் 265
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6-11-84

## மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் அனுதாபப் பதிவேட்டில் மூவாயிரம்பேர் அஞ்சலி!

### கறுப்புப்பட்டி அணிந்து மாணவர்கள் 'அனுதாபம்'

[யாழ்ப்பாணம்]

பெருந்தொகையான மாணவர்கள் உட்பட விவசாயிகள் தொழிலாளிகள் மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின்மறைவுகுறித்து அனுதாபச் செய்தி எழுதும் பதிவேட்டில் அஞ்சலிசெலுத்தினர்,

யாழ். மாநகரசபையில் வைக்கப்பட்ட அனுதாபப்பதிவேட்டில் இதுவரை 3000க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டனர்.

நேற்று மட்டும் 500க்கும் அதிகமானவர்கள் கையெழுத்திட்டனர்.

பெண்களும் மாணவிகளும் நேற்று மனதையுருக்கும் வகையில் அனுதாபச் செய்திகளை எழுதினுர்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள சகல கல்லூரிகளிலிருந்தும் மாண (5ம் பக்கம் 5ம் கலம்பார்க்க)



## ★ பூரண சிகிச்சை பெறும்பொருட்டு

# எம். ஜி. ஆர். அமெரிக்கா புறப்பட்டார்

### விரைவில் குணமடைய ரஜீவ் செய்தி; நரசிம்மராவ் வழியனுப்பி வைத்தார்

(சென்னை)

**தமிழக முதலமைச்சர் திரு. எம், ஜி, ராமச்சந்திரன், விசேட சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்கா சென்றுள்ளார். மருத்துவ வசதிகளுடன் கூடிய தனி 'போயிங்' விமானமொன்றில் தமது குழுவினருடன் முதலமைச்சர் நேற்றுப் புறப்பட்டார்.**

முதலமைச்சருடன் அவரது துணைவியார் திருமதி ஜானகி ராமச்சந்திரன், மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எச் வி. ஹண்டே முதலமைச்சரின் செயலாளர் திரு. எம். பரசிவம், டாக்டர்கள் நரேந்திரன், ஜெகநாதன், தாயூமானவர், தியாகராஜன் ஆகியோரும் அமெரிக்கா செல்கின்றனர்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச் சந்திரனை அமெரிக்காவுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைப்பதென்று இரா நெடுஞ்செழியன் தலைமையில் நேற்றுக் கூடிய தமிழக அமைச்சரவை முடிவு செய்தது.

''முதலமைச்சர் அமெரிக்கா செல்வதற்கான உடல் நிலையை (8ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

### கொழும்பில் குண்டுவெடிப்பு:

## மேலும் 3 இளைஞர் கண்டியில் கைது

(கொழும்பு)

கொழும்புநகரில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கண்டியில் மேலும் மூன்று இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புத் தொடர்பாக இம்மூவரிடமிருந்து முக் (5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## இந்திரா 'அஸ்தி' பனிபடர்ந்த இமயத்தில் தூவப்படும்!

### இன்று தமிழகம் வருகிறது

(புதுடில்லி)

அன்னை இந்திராவின் 'அஸ்தி' நேற்றுக்காலை 6-30 மணியளவில் சாந்திவனத்தில் சேகரிக்கப்பட்டது.

சுமார் 30கலசங்களில் இவை சேகரிக்கப்பட்டன. பிரதமர் திரு. ரஜீவ் காந்தி உட்பட பல அமைச்சர்கள், மற்றும் குடும்ப உறவினர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

'அஸ்திக்' கலசங்களில் ஒன்று தமிழகத்துக்கு இன்று கொண்டுவரப்படுகிறது- இது போன்று பாரதத்தின்அனைத்து மாநிலங்களுக்கும் அஸ்திக் கலசங்கள் கொண்டு செல்லப்படும்.

எதிர்வரும் சனிக்கிழமை கல (5-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

### ரயில்சேவை

(யாழ்ப்பாணம்)

ஒருவாரகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொழும்பு — யாழ்ப்பாணம் ரயில் சேவை, நாளை புதன்கிழமை முதல் வழமைக்குத் திரும்பும்.

புதன்கிழமை 'இன்ரசிற்றி' ரயில் யாழ்ப்பாணம் வரை வந்து அன்றைய தினமே கொழும்பு திரும்பும்.

இதனைத் தொடர்ந்து வழக்கமான கொழும்பு — யாழ்ப்பாணம் 'யாழ்தேவி'யும் நடைபெறும்.

## பிரிட்டனில் பாராட்டுப்பெற்ற யாழ்.கலைமன்றம்!

(லண்டன்)

லண்டன் சென்று பல்வேறு பகுதிகளிலும் பத்துக்கும் அதிகமான கலைநிகழ்ச்சிகளை அளித்து, பிரிட்டிஷ் கலாரசிகர்களின் பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுக்கெண்ட யாழ். கலைமன்றத்தினர், கடந்த வாரம் தாயகம் திரும்பினர்.

லண்டன் நர்த்தனலயத்தின் அழைப்பின்மீது லண்டன் சென்ற யாழ், கலைமன்றத்தினர் தங்களது வெள்ளி விழாவை லண்டனில் கொண்டாடினுர்கள்

திரு. ராம் குமாரசாமி தலைமையில் பிரிட்டன் சென்ற யாழ் கலைமன்றக்குழுவில் திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம், திருமதி சத்தியபாமா ராஜலிங்கம், திரு. ஏ. எஸ். ராமநாதன், செல்வி பிரியதர்ஷினி, ரங்கா குமரசாமி, செல்வன் ரகுநந்தனன் ராஜலிங்கம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர், இவர்களுடன் யாழ் கலைமன்றத்தைச் சேர்ந்தவர்களும் தற்போது லண்டனில் வசிப்பவர்களு (5-ம் பக்கம் 5ம் கலம்பார்க்க)

### இவ்வாரம் முழுவதும்

## 'அந்தவானொலி' ஒலிபரப்பில் இந்திரா சிறப்பு அஞ்சலி!

### மும்மொழிகளிலும் ஒலிபரப்பாகும்

(பண்டத்தரிப்பு)

''தமிழீழத்தின்குரல் என்ற இரகசிய வானொலிச் சேவை இந்த வாரம் முழுவதும் இந்திரா அஞ்சலி நிகழ்ச்சியை ஒலிபரப்பவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை 7 மணி முதல் 7-30 மணிவரை அச்சேவை இந் (8-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

### "பிரதான மின்நிலையங்களைத் தகர்த்து

## நாட்டை இருளில் ஆழ்த்த பயங்கரவாதிகள் திட்டம்!"

### பிரதமர் திடுக்கிடும் தகவல்

[கொழும்பு]

நாட்டிலுள்ள பிரதான மின்நிலையங்களைத் தகர்த்து நாட்டை இருளில் மூழ்கடிக்க பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்தார்கள் என்று பிரதமர் ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

கொழும்பு மத்திய தொகுதி ஐ. தே க. கிளைகளின் நிர்வாக சபைக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள குடிசைகளைத் தீயிட்டுக் கொழுத் பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இரவில் குடிசைகளை கொழுத்திவிட்டு மக்கள் அனைவரினதும் கவனத்தை அங்கு திருப்பிவிட்டு மின்நிலையங்களைத் தாக்க திட்டமிடப்பட்டி (5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## 'மரணதண்டனை' பாணியில் மின்கம்பத்தில் சடலம்!

(கிளிநொச்சி)

வடபகுதியில் அடிக்கடி இடம் பெறும் மரண தண்டனைப் பாணியில் ஒரு கொலைச் சம்பவம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

கந்தசாமி சுதந்திரராஜா (வயது 24) என்ற வாலிபரின் கொலையுண்ட சடலம் கிளிநொச்சி கனிஷ்ட்ட மகாவித்தி (8ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

# அச்சு விளம்பரம்

## தேவை

புத்தகங்கள், விநியோகம் செய்ய, விற்பனை செய்ய சிறிய பையன்கள், வயது முதிர்ந்தவர்கள், பெண்கள் தேவை. முற்பணம் கட்டுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விற்பனைக்கு நல்ல கொமிஷனும் வழங்கப்படும். அன்புஜீ புத்தக நிலையம் (பழைய விபுலானந்த அச்சகம்), 248/9, கே. கே. எஸ். வீதி, யாழ். நகர். 584

வெளிநாட்டில் வேலைபார்க்கும் மது, மாமிச, புகைத்தல் பழக்கமற்ற இந்து உயர் வேளாள இனத்தைச் சேர்ந்த 27வயதுநிரம்பிய 8ல்செவ்வாய் இராசியுள்ள, உயர்தரம்வரை படித்த மணமகனிற்கு அதே இனத்தைச் சேர்ந்த 25வயதிற்குட்பட்ட படித்த நல்ல அழகும், குணமும் வாய்ந்த மாமிசம் உண்ணாத மணமகள் தேவை. பெண்ணின் பிறந்த திகதி, குடும்ப விபரம், அண்மையில் எடுத்த முழு உருவப் புகைப்படம், குறிப்பு ஆகியவற்றுடன் பெண்ணிற்கு கொடுக்கக் கூடிய முழு சீதன விபரத்துடன் விண்ணப்பிக்கவும். யாவும் திருப்பி அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல: 581, C/o, ஈழநாடு. 581

## தேவை

அச்சகங்களில் உள்ள பழைய எழுத்துக்களுக்கு உடன்பணம் கொடுத்து(14-11-84வரை) ஏற்றுக் கொள்ளப்படும். அன்புஜீ புத்தகநிலையம், 248/9, கே. கே எஸ். வீதி, யாழ்நகர். 585

## விற்பனைக்கு

மானிப்பாய் பிரதானவீதிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் அண்மையில் புளியடிச் சந்தை ஒழுங்கையில் 1¼ பரப்புக்காணிவிற்பனைக்குண்டு விபரங்களுக்கு டாக்டர் யோகாம்பாள் சீவரத்தினம், இல: 10, விதானையார் வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம். 576

## காணவில்லை

1-11-84 ஊரெழுவில்மேசன் வேலைக்குரிய ஆயுதங்கள் மற்றும் வாள் முதலியனவும் காணவில்லை. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். M. கனகலிங்கம் விஜேபாஜி நிலையம், போயிட்டி, நீர்வேலி. 578

# எம். ஜி. ஆரைக் கொண்டுசெல்லும் விமானம் பரீட்சார்த்த பயணம்!

## ஏயர்இந்தியா விசேட—போயிங்கை ஒதுக்கியுள்ளது!!

(சென்னை)

**தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரனை அமெரிக்கா கொண்டுசெல்ல விருக்கும் 'போயிங்விமானம்' நேற்று பரீட்சார்த்த பயணமொன்றை மேற்கொண்டது.**

இந்த விசேட 'போயிங்' விமானம் ஏயர்இந்தியாவுக்குச் சொந்தமானதாகும். திரு. எம். ஜி. ஆர். இதில் படுத்திருந்து செல்வதற்கான விசேட படுக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



இவ்விசேட 'போயிங்' விமானம் நேற்று 45 நிமிட நேரம் அதில் பொருத்தப்பட்டுள்ள வசதிகள் யாவும் நேர்த்தியாக இருக்கின்றனவா? என்பதைப் பரிசோதிக்கவே பரீட்சார்த்த பயணம் மேற்கொள்ளப்பட்டது. இப்பயணத்தில் தமிழக சுகாதார அமைச்சர் டாக்டர் ஹண்டே உட்பட சிலஅதிகாரிகள் இருந்தனர்.

இத்துடன் அதிஉயரத்தில் அவரது தேகநிலைமாற்றங்களை சாதாரண நிலையில் வைத்திருக்கவெனவும் விசேட சாதனங்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன

திரு. எம் ஜி. ஆரின் பயணம் எப்பொது இடம்பெறும் என்பது குறித்து நேற்றுக் காலை வரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அவரின் நரம்பியல் நிலைமை பெருமளவில் முன்னேறியுள்ளது. அழைப்புகளுக்கு சைகை மூலம் பதில் தருகிறார்.

அமெரிக்காவில் திரு. ராமச்சந்திரனுக்கு சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும். இச்சிகிச்சைக்கென பலர் சிறுநீரகத்தை வழங்க முன்வந்துள்ளனர். [கி]

# இந்திராவுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை மேற்குச் சிறுர்கள், அவ்வூர் மக்கள் கடந்த சனிக்கிழமை இலந்தைக் குளம் விநாயகராலயத்தில் மக்கள் முன்னேற்றத்தையே குறிக்கோளாக கொண்டு வாழ்ந்த உலகத் தாய்அன்னை இந்திரா காந்தியின் ஆத்ம சாந்திக்காக காலை திருவாசக முற்றோதல் ஆரம்பித்து பிற்பகல் 2 மணிக்குப் படித்து முடித்தனர்.

# யாழ். மாவட்டத்தில் வசதிக்கட்டண ஆசிரியர் பிரச்னையை விளக்குவர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் வசதிக் கட்டணத்தில் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பதவி வகிப்பவர்கள் சங்கம் தம்மை நிரந்தரமாக்கும்படி கோரி விண்ணப்பித்திருந்த மகஜர் குறித்து அவர்களுடன் இம்மாதம் 10-ந்திகதி கல்விச் சேவைக் கமிஷன் உறுப்பினர் சட்டத்தரணி திரு கணநாதன் ஜெயக்குமார் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சங்க உறுப்பினர்களை சந்தித்துப் பேசி அவர்கள் பிரச்னையை அறியவுள்ளார்.

அவர்கள் பிரச்னை குறித்து அறிந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் திரு ஜெயக்குமார் தெரிவித்தார்.


## கூலியாட்கள் தேவை

சவுதி அரேபியாவில் தெருக்கள் துப்புரவு செய்யும் வேலைக்கு திடகாத்திரமும், நல்ல ஆரோக்கியமும், கடின உழைப்பும் கூடிய கூலியாட்கள் தேவை. விண்ணப்பதாரரின் பாரம் சுமக்கும் திறமை பரீட்சிக்கப்படும். சம்பளம் 525 சவுதி றியால்கள். பாஸ்போட் மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் 1984 நவம்பர் 7-ந் திகதி புதன்கிழமைக்கு முன் நேரில் வரவும்.

CONSTRUCTION AND DEVELOPMENT CO. LTD.
37, S De S JAYASINGHE MAWATHA,
NUGEGODA.
Telephone: 552307, 554541

Labour Licence No: 96 (569)


# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

**ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்**

காரைநகர் பாலாவோடை சின்னக்குட்டி வேலுப்பிள்ளை என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தினதும் உடைமைப் பொருட்களினதும் விடயத்தில்.

வேலுப்பிள்ளை கைம்பெண் சுந்தரம்மா, பாலாவோடை, காரைநகர்.

மனுதார்

வழக்கு இல. ரி/93

எதிராக

1. வேலுப்பிள்ளை கனகரத்தினம்
2. வேலுப்பிள்ளை தேவராசா

இருவரும் பாலாவோடை, காரைநகர்.

பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள்ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுகத் தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

அ. நடராசா
பதிவாளர்

வரைந்தவர்:
**அ. மரியாம்பிள்ளை**
மனுதாரின் சட்டத்தரணி

552

# இந்திரா மறைவு குறித்து லண்டன் தமிழோசை வழங்கிய விசேட ஒலிபரப்பு

(அ. கனகசூரியர்)

மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் இறுதிச் சடங்கு விபரங்களை ஒலிபரப்பும்வகையில் லண்டன் பி. பி. ஸி. தமிழோசை கடந்த சனிக்கிழமை இரவு விசேடமாக இடம்பெற்றது

வழமையாக திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே ஒலிபரப்பாகிவரும் லண்டன் தமிழோசை, கடந்த சனிக்கிழமையன்று வழங்கிய அரைமணி நேர சிறப்பு நிகழ்ச்சியில் மறைந்த பிரதமரின் இறுதிச்சடங்குகள் பற்றிய செய்தித் தொகுப்பு, இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள வருகைதந்திருந்த உலகத்தலைவர்களைப் பற்றிய தகவல் திரட்டு, பிரிட்டனில் வாழும் இந்திய சமுதாயத்தினர் பிரதமரின் மறைவுக்காகச் செலுத்திய அஞ்சலிகள், பிரார்த்தனைகள் சம்பந்தப்பட்ட விபரங்கள் போன்ற பல விஷயங்கள் இடம்பெற்றிருந்தன.

பாரதப் பிரதமர் மறைந்த தினமான கடந்த புதன்கிழமை இரவு ஒலிபரப்பாகிய லண்டன் தமிழோசையிலும் அன்றைய வழமையான அம்சங்கள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டு, அவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ''மறைந்தாயோ பிரியதர்சினி'' என்ற பெயரில் விசேட நிகழ்ச்சியொன்று ஒலிபரப்புச் செய்யப்பட்டதுடன், அவரின் படுகொலை சம்பந்தமான விசேட செய்தியறிக்கைகளும் இடம்பெற்றன.

இரு சிறப்பு நிகழ்ச்சிகளையும் தமிழோசை தயாரிப்பாளர் திரு. எஸ். சங்கரமூர்த்தி தயாரித்து தொகுத்து வழங்கியிருந்தார்.

## ரூபவாஹினி

மாலை
5-30 'மைட்டி மௌஸ்' (ஆங்கிலம்)
6-00 'நாடகம்' (சிங்களம்)
6-30 'நான் உங்கள்தோழன்' உள்ளூர்த்தமிழ் திரைப்படம் [தமிழ்]
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
7-45 'கோட்ரெட்'
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 'கோட்ரெட்' [தொடர்ச்சி]
9-00 'டிபரன்ற்ஸ்டிரோக்ஸ்'
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 துப்பறியும் சித்திரம் [ஆங்கிலம்]
10-30 உலகச் செய்திகள்
10-35 சித்திரத் தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## வெரித்தாஸ்

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலி தமிழ் நிகழ்ச்சியிலும், மறைந்த பாரதப் பிரதமருக்கு அஞ்சலிசெலுத்தும்வகையில் சிறப்பு நிகழ்ச்சிகளும் விசேட செய்தியறிக்கைகளும் ஒலிபரப்பப்பட்டன.

பிரதமரின் மறைவுக்கு இறை பிரார்த்தனை மூலம் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளும் வெரித்தாஸ் தமிழ் ஒலிபரப்பில் இடம்பெற்றன.


வரவு - செலவு (BUDGET) வருமுன் முந்துங்கள்!

- மின்சார உபகரணங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அச்சுக்கூட காகிதாதிகள்

இவையாவையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் வழங்கும் ஒரே ஸ்தாபனம்

**அம்பலவாணர் அன் சன்ஸ்,**

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
போன்: 24291

# இன்று அமெரிக்க ஜனதிபதித்தேர்தல்

# ரீகன், மொன்டேல் கடும் போட்டி!








(வாஷிங்டன்)

அமெரிக்காவின் 41-வது ஜனதிபதித் தேர்தல் இன்று இடம்பெறுகின்றது.

கடந்த இரு மாதங்களாக திரு. ரீகன், திரு. மொன்டேல் ஆகியோர் தீவிர பிரசாரங்களை மேற்கொண்டு நேற்று முன்தினம் அவற்றை பிரமாண்டமான முறையில் பூர்த்திசெய்தனர். இதுவரை அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் ரீகன், மொன்டேல் செல்வாக்கு பல்வேறு தரத்திலும் இருக்கக்காணப்பட்டது. ஆனாலும் வெகு அண்மையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பொன்று திரு. ரீகன் 16 அல்லது 24 வீதம் முன்னணியில் இருப்பதைக் காட்டியுள்ளது.

குடியரசுக் கட்சி வேட்பாளரும், 40-வது அமெரிக்க ஜனதிபதியுமான திரு. ரீகனின்வயது 73 ஆகும். திரைப்படத்துறை மூலம் தம்மைப் பிரபலமாக்கிக் கொண்டவர். இவர் ஒரு முன்னாள் பிரபல ஹெ லிவூட் திரைப்பட நட்சத்திரமாவார்.

## வறிய குடும்பம்

ஒரு சப்பாத்துக் கடையில் இவரது தந்தை சாதாரண விற்பனையாளராக இருந்தார். குடும்பம் சிறு வயதில்வறுமைப்பட்டிருந்தது.

திரு. ரீகன் வானொலி அறிவிப்பாளராகிப் பின்னர் படிப்படியாக தமது வாழ்க்கையை அபிவிருத்தி செய்தார். இவர் ஒரு பொருளியல் பட்டதாரியுமாவார். இரு தடவைகள் மணம்புரிந்தவர்.

கலிபோர்னியா மாநிலத்தில் செனட்டராகி அரசியலில் வெள்ளைமாளிகைவரை தம்மை உயர்த்திக்கொண்டார். திரு. ரீகனின் பெற்றோர்கள் அயர்லாந்திலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்களாவர்.

## வோல்ட்டர் மொன்டேல்

ஜனநாயகக்கட்சி வேட்பாளரான திரு. வோல்ட்டர்மொன்டேல் [வயது 56]. ஏற்கனவே ஜனதிபதி கார்ட்டர் நிர்வாகத்தில் உபஜனதிபதியாக இருந்தவர்.

சட்டத்தரணியான இவர் மின்னசொட்டா மாநிலத்தில் சட்டமாஅதிபராகவும் கடமையாற்றியவர். கலைத்துறை, சட்டத்துறைப் பட்டதாரியாவார்.

ஜோன் அடம்ஸ் என்ற பெண்ணை மணமுடித்த இவருக்கு மூன்று பிள்ளைகள் ள்ளனர். 51ம் ஆண்டு முதல் 53ம் ஆண்டுவரை இராணுவத்திலும் பணிபுரிந்தார்!

இவரின் பெற்றோர்கள் நோர்வே நாட்டிலிருந்து அமெரிக்கா வந்து குடியேறியவர்களாவர்.

## உப ஜனதிபதி வேட்பாளர்கள்

திரு. ரீகனின் உபஜனதிபதி வேட்பாளராக திரு. ஜோர்ஜ் புஷ் நிற்கின்றார். அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கைகளில்இவருக்கு கூடுதல் அனுபவமுண்டு. இவரும் ஒரு சட்டத்தரணியாவார்.

திரு. மொன்டேலின் உப ஜனதிபதி வேட்பாளராக திருமதிஜெரால்டின்பெராரோ போட்டியிடுகிறார். 46 வயது சட்டத்தரணியான இவர், அமெரிக்காவின் முதலாவது பெண் உபஜனதிபதி வேட்பாளராவார். இவர் ஒரு கலைப் பட்டதாரியும் கூட. றோமன் கத்தோலிக்க மதத்தவர்.

இவரது கணவர் ஒரு வர்த்தகப் பிரமுகராவார். மூன்று பிள்ளைகள் இவர்களுக்குண்டு. பெராரோவின் பெற்றோர்கள் இத்தாலியிலிருந்து வந்து குடியேறியவர்களாவர்.

## தேர்தல்

இன்றைய தேர்தல்முடிவுகள் நாளை பூரணமாகத் தெரிந்துவிடும். வாக்குகள் யாவும் கம்பியூட்டர் மூலமாகவே கணிப்பிடப்படும். 50 மாநிலங்களில் தேர்தல் இடம்பெறுகிறது. இவற்றில் சகல நாட்டு மக்களும் தத்தமக்குவேண்டியகுடியரசுக்கட்சி, ஜனநாயகக்கட்சிப் பிரதிநிதிகளுக்கே வாக்களிப்பர். தொடர்ந்து அப்பிரதிநிதிகளே ஜனதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களிப்பர்.

புதிய ஜனதிபதியாக தெரிவு செய்யப்படுபவர்அடுத்தாண்டு ஜனவரியில் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார். [கி]

## சுகாதார தொண்டர் பயிற்சி

[மானிப்பாய்]

காங்கேசன்துறை சுகாதார அலுவலகத்தில் ஆரம்ப சுகாதார கவனிப்புத் தொடர்பான சுகாதார தொண்டர்குழுப் பயிற்சி வரும் 16-ம், 17-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

ஆரம்பசுகாதாரஅம்சங்கள், இதன் திட்டம், செயல்பாடுகளை மக்களுக்கு விளக்கம் கொடுத்தல் ஆகியன இதன் நோக்கமாக இருக்கும்.

17 அம்சங்கள் அடங்கிய விளக்கம்தற்போதையநிலையும் மக்களின் உரிமைகளும் ஆகியன குறித்தும் ஆலோசனை நடைபெறும். சுற்றாடல் சுகாதாரம், தொற்றுநோய்கள், சிகிச்சை முறைகள், தாய் சேய் நலம், முதல் உதவி போன்ற விஷயங்களிலும் வைத்திய அதிகாரிகளும், சுகாதார வைத்திய அதிகாரிகளும் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

## புதுடில்லி சீக்கியத்தலைவரின் ஆணைப்படியே கொலை செய்தனர்!

(புதுடில்லி)

புதுடில்லியில் சீக்கிய பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளுக்குத் தலைவராகவிருந்த ஒருவரின் ஆணைப்படியேதான் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கொலை செய்ததாக மெய்காப்பாளர் ஒருவர் இந்தியப் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைக்குத் திட்டமிட்ட சூத்திரதாரி இச்சம்பவத்திற்கு 10 தினங்களுக்கு முன்பே நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார் என்பதனுல் இக்கொலை சில வெளிநாட்டு சீக்கியர்களினுல் திட்டமிடப்பட்டுள்ளது என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபரின் வீடு தற்போது தீக்கிரையாகிவிட்டதாம். (சூ)

## புதுடில்லி கலவரங்கள்: பிரிட்டிஷ் கிரிக்கெட்அணிக்கு தகுந்த பாதுகாப்பு! பந்தயங்கள் தடைப்படாது!!

புதுடில்லி, நவ5

இந்தியாவில் டெஸ்ட் கிரிக்கெட் பந்தயங்களை ஆடவந்த பிரிட்டிஷ் கிரிக்கெட் அணிக்கு புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

திருமதி இந்திராகாந்தியின் மறைவையடுத்து மூண்டகலவரங்களைத் தொடர்ந்து இப்பாதுகாப்பு வழங்கப்பட்டது புதுடில்லியிலுள்ள பிரித்தானிய ஸ்தானிகராலயம் தனது கிரிக்கெட்வீரர்களின்பாதுகாப்பைப் பொறுப்பேற்றிருந்தது.

இந்திரா மறைவையடுத்து கிரிகெட் பந்தயங்கள் ரத்து செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் துக்கதினம் முடிவடைந்ததும் பந்தயங்கள் ஆரம்பமாகும் என்று கூறப்பட்டது

பிரித்தானிய கிரிக்கெட் அணி இந்திரா மறைவையடுத்து மூண்ட கலவரங்களினுல் இந்தியாவிலிருந்து தற்காலிகமாக இலங்கை வந்து தங்கவும் முடிவெடுத்தது. ஆனுல் இம்முடிவு பின்னர் மாற்றப்பட்டு இந்தியாவிலேயே இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரித்தானிய கிரிக்கெட் அணியின் முகாமையாளர், திருமதி காந்தியின் மரணச் சடங்குகளுக்கென புதுடில்லி வந்திருந்த இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவரும் அமைச்சருமான திரு காமினி திசாநாயக்காவையும்சந்தித்து உரையாடினர். (கி)

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605



### மணிவாக்கு

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டானென்று
உடம்பினையானிருந்து ஓம்புகின்றேனே.

— திருமந்திரம்.

## நமது நோக்கு

# டாக்டர்களின் மனவேதனை

கண்டிச் சம்பவத்தை யிட்டுசிலவாரங்களுக்குமுன் அரசினர் வைத்திய அதிகாரிகள் சங்கம் மட்டுப்படுத்தப்பட்ட அரைநாள் வேலை நிறுத்தம் செய்தது பற்றி நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம்.

இன்னும் அந்த விடயம் தீர்க்கப்படாமலிருப்பதால் நேற்று சில ஆஸ்பத்திரிகளைத் தவிர நாட்டிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் டாக்டர்கள் வேலையை நிறுத்தி வெளியேறுவதாகக் கிடைத்த செய்தி வேதனைக்குரியது.

கடமையில் ஈடுபட்டிருந்த டாக்டர் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரால் தாக்கப்பட்டதே டாக்டர்கள் குறிப்பிடும் சம்பவம். சுகாதார அமைச்சு இன்னும் அதற்கேற்ற நடவடிக்கை எடுக்காதது பெரும் விந்தையே! குறிப்பிட்ட இச்சம்பவத்தின் சரி, பிழை பற்றி நாம் தீர்ப்பு வழங்க முன்வரவில்லை.

இது போன்ற சம்பவம் முன்னரும் நடந்திருப்பதால் இதற்குரிய நடவடிக்கை துரிதப்படுத்த வேண்டிய பொறுப்பு சுகாதார அமைச்சுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்துக்குரியது; இது ஒரு தனிப்பட்ட விடயம் அல்ல; டாக்டர்களின் பாதுகாப்பும், மதிப்பும் இந்த ஒரு சம்பவத்தால் பாதிக்கப்படுமாஎன்று வாதாடுபவர்கள் விடயம் விளங்காதவர்கள்: ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறே பதம்.

நாம் ஏன் அப்படிச்சொல்கின்றோம்? நாம் வாழும் சூழ்நிலை சட்டத்துக்கும், ஒழுங்குக்கும் எள்ளளவு மதிப்பும் கொடாத நிலை.

இத்தகைய சம்பவம்நல்ல காலம் (வடபகுதியில்நடைபெறவில்லை) கண்டியில் நடைபெற்றது. பாத்திரங்களும் தமிழர்கள் அல்ல. இன்றேல் இதுவும் ஒருவிதமான பயங்கரவாதமென்று சொல்ல அமைச்சர்கள் மட்டுமல்ல சில கொழும்புத் தினசரிகளே முன்னிற்கும். தெற்கில் நடப்பது எதுவும் பயங்கரவாதமல்ல என்ற மாயாவாதம் அனர்த்தங்களை அதிகரிக்கும்.

விடயத்தை விட்டு நாம் நழுவவில்லை. வன்செயல், பயங்கரவாதம் என்பதெல்லாவற்றிற்கும் வடக்குதான் 'சோல் ஏஜென்சி' அல்ல என்பதை வலியுறுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதனைப்பொருட்படுத்தாது போனவழியில் பிரசாரம் போவதானால் நாடெங்கிலும் தளர்ந்துவரும் சட்ட ஆட்சி சடுதியில் ஸ்தம்பித்துவிடுவது ஆச்சரியமல்ல. இந்த எச்சரிக்கை வழங்கவேண்டியது எமது கடமை.

சட்ட ஆட்சிக்கு அச்சாணியானவர் காவற்படையினர். இன்று அவர்களுடைய பொறுப்பும் பாரமும் உயிரைக் கையிலேந்திய நிலை என்றால் அது மிகையாகாது. குறிப்பாக வடபகுதியில் அவர்களின் பணி அபாயமானது.

இதனை நன்குணர்ந்துதான் பொலிஸாரின் நடவடிக்கைகளை நாம்கணிக்கவேண்டும். ஆனால் பொலிஸாருக்கு மனநோய் ஏற்படும் சூழ்நிலை நாடெங்கும் உண்டு. அதனைக் கட்டுப்படுத்தும் பொறுப்புடையவர் நிலைமையை மோசமாக்கும்செயலில் ஈடுபடுவதானால் வேலி பயிரைமேய்ந்த கதைபோல் முடியும்; அதற்கு அரசு பொறுப்பில்லையென்று அலட்சியம் செய்யலாகாது.

டாக்டர்கள் சம்பள உயர்வுக்கோ வேறு தமக்குரிய சேவைவசதிகளுக்கோவேலை நிறுத்தம் செய்வதை நாம் அவசரப்பட்டு ஆதரிப்பதில்லை. அவ்விடயங்களில் பொறுமை மேலானது.

மருத்துவ சேவை உயிருக்கு அத்தியாவசியமான சேவை அத்தகைய சேவைக்கு எங்கிருந்தும் அச்சுறுத்தல் அனுமதிக்கலாகாது. கண்டிச் சம்பவம் இவ்வளவுதூரம், இவ்வளவு காலம் நீடிக்கவிட்டது நிசம். டாக்டர்களுக்கு மனவேதனை அளிக்கும் ஆற்றுக்கொடுமையில் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருப்பதாக நாம் கருதுகின்றோம்.

சாதாரண அசம்பாவிதங்களை மனித வேதனைக்கு நிவாரணமளிக்கும் தொண்டில் ஈடுபட்டிருக்கும் பெரியோர் பொருட்படுத்தப்படாது. 'வேலை நிறுத்தம்' மருத்துவ சேவை அகராதியில் இடம்பெறும் நிலை ஏற்படக்கூடாது.

இதனை உணர்ந்தே இந்தக் கட்டத்திலும் அவசர நோயாளிகளை கவனிக்கும் பொறுப்புக்கு வைத்திய சங்கம் ஒழுங்கு செய்திருக்கிறது.

நடைமுறையில் வேலை நிறுத்தம் ஒரு நாளைக்குத்தானும் பெரும் நட்டத்தை ஏற்படுத்தவல்லது. கடந்த கால அனுபவம் இதனைக் கற்பிக்கின்றது.

சுகவாழ்வும், மனிதபாதுகாப்பும் பொதுநல சேவையின் இரு கரங்கள். கைகொடுத்து தவறுக்கு மன்னிப்புக்கோரவும், அதனைப் பெருந்தன்மையுடன் வழங்கவும், அரசாங்கம் ஏற்பாடு செய்யவல்ல செல்வாக்கு இல்லாமல் போனதின் மர்மம் என்ன?

இப் பத்திரிகை வெளியாகுமுன் டாக்டர்களின் மனவேதனை மட்டுமல்ல மக்கள் சார்பில் எழுந்த எமது உள்ளக் குமுறலும் தீர்ந்துவிடவேண்டுமென்பதே எமது வேணவா.

டாக்டர்களின் சேவை அத்தியாவசியமான சேவையென்பதை யாரறியார்? ஆனால் அதனைப்பிரயோகித்து அவர்களை வேலைக்கழைப்பது மனவேதனையைத் தீர்க்கும் மருந்தல்ல.

### அஞ்சலி

[மட்டுவில்]

மட்டுவில் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பு மாணவர் உட்பட சுமார் 750 மாணவர் உண்ணாவிரதமிருந்து பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தினர், ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# 'சுகாதார திணைக்களத்துக்கு தாதிமாரைச் சேர்ப்பதில் பாரபட்சம் குளறுபடி!'

## ஜனாதிபதியிடம் புகார்

(கொழும்புத்துறை)

சுகாதாரத் திணைக்கள ஊழியர்களிலிருந்து தாதிமார் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதில் பாரபட்சமும், குளறுபடியும் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதியிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்க யாழ். மாவட்டப் பிரதிநிதி இதுசம்பந்தமான மகஜரொன்றை ஜனபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

பிரஸ்தாப மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

''திணைக்கள ஊழியர்களிலிருந்து தாதிமார் பயிற்சிக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும், சேவை நிரந்தரம் உறுதிப்படுத்தப்பட்டவர்களும் சேவைமூப்பு உள்ளவர்களுமே இத்தாதிமார் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாமென்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தாதிமார் பயிற்சிக்குத் தெரிவானோரின் பெயர் பட்டியல் எமக்கு அதிர்ச்சியையும், கவலையையும் அளித்துள்ளது. அறிவுறுத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக சேவையில் உறுதிப்படுத்தப்படாதவர்களும் சேவைமூப்பு இல்லாதவர்களும் இத்தாதிமார் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இது எமக்கு ஏமாற்றத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே இவ்விடயம் பற்றி உடன் நடவடிக்கை எடுத்து மீளாய்வுசெய்து விமோசனமளிக்கவேண்டும்'' என்று அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் சுகாதார சேவைகள் அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கும், இலங்கை சுகாதாரத் திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் சங்கச் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## "உலகநாடுகளுக்கு உணர்த்தியவர்"

[நெடுந்தீவு]

''பாரத மக்களின் நலனுக்கும் அவர்களது சுதந்திரமான இறைமைக்கும் பாதுகாவலராக மட்டுமன்றி உலமெங்குமுள்ள நசுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் திருமதி. இந்திராகாந்தி. நாம்துயருற்றபோது அவர்கள் அனாதைகள் அல்லர் அவர்களின் உரிமைகளுக்கு அனைத்து மக்களுமே மதிப்பளிக்க வேண்டும் என்று உலக நாடுகளுக்கு உணர்த்தியவர்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் மறைவு குறித்து நெடுந்தீவு மக்களின் சார்பில் வெளியிட்ட இரங்கல் செய்தியில் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் கூறியுள்ளது.

## "அவதானமாக அணுகியவர்"

(யாழ்ப்பபணம்)

மானிப்பாய் ப.நோ.கூ. சங்க ஊழியர் கருத்தரங்கில் தலைவர் திரு. சி.பொ.வ.க. முதலியார் பேசுகையில் ''இந்திராவின் மறைவு இலங்கைத் தமிழர்களுக்கு மிகவும் இழப்பு!

எங்கள் பிரச்னைகளை மிக அவதானத்துடன் அணுகி அவர் தீர்த்து வைக்க எடுத்த முயற்சிகளை என்றுமே மறக்க முடியாது'' என்று நினைவு கூர்ந்தார்.

ஊழியர் சார்பில் திரு. க. பாலசுந்தரம் உட்பட பலரும் பேசினர்.

இந்திராவின் மறைவையொட்டி மானிப்பாய் ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கு மூன்று நாள் விடுமுறை வழங்கப்பட்டது.

## நுணுவில் தேவாலயத்தில் ஆத்ம பிரார்த்தனை

(மட்டுவில்)

தென் இந்திய திருச்சபையின் நுணுவில்மண்டல தேவாலயத்தில் தமிழக முதலமைச்சர் உடல் நலமுற பாரதப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் ஆட்சி நிலைக்க அமரத்துவமெய்திய திருமதி. இந்திரா காந்தியின் ஆன்மா சாந்தி பெற விசேட பிரார்த்தனை வழிபாடுகள் செய்யப்பட்டன.

வண. பிதா மேதா இந்த வழிபாடுகளை நடத்தி வைத்தார்.

## பரு. கிழக்கிலும் மௌன ஊர்வலம்

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கில் மறைந்த இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்திக்கு அஞ்சலி செய்யும்வகையில் மௌன ஊர்வலங்களும், அஞ்சலிக் கூட்டங்களும் நடத்தப்பட்டன

அன்னை இந்திராவை தகனம் செய்த கடந்த சனிக்கிழமை நடந்த மௌன ஊர்வலத்திலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் கறுப்புப்பட்டியை அணிந்து கலந்துகொண்டனர்.

ஆழியவளை பாடசாலைக்கு அண்மையிலிருந்து புறப்பட்ட நான்கு மைல் நீள ஊர்வலம் உடுத்துறைக்கு ஊடாக கொடுக்கிளாயைச் சென்றடைந்து அஞ்சலிக்கூட்டம் நடத்தப்பட்டது.

மரதன்கேணியிலிருந்து புறப்பட்ட 8 மைல் நீள ஊர்வலம் தாளையடி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கிராமங்களுக்கு ஊடாகச் சென்றடைந்தது.

மற்றொரு அஞ்சலிக்கூட்டம் வெற்றிலைக்கேணியில் நடத்தப்பட்டது

ஊர்வலங்களில் சென்றோர் அஞ்சலிச்சுலோக அட்டைகளை ஏந்திச் சென்றனர்.

## இதயத்தைத் தொட்ட சரவணை ஊர்வலம்

(வேலணை)

இந்திராகாந்தியின் மறைவையொட்டி சரவணைபாரதி சனசமூகநிலையம் மௌனஊர்வலமும், அஞ்சலிக்கூட்டமும் நடத்தியது. பாரதிசனசமூக நிலையத்திலிருந்து மௌன ஊர்வலம் ஆரம்பமானது. ஊர்வலம் சென்ற வீதியெங்கிலுமுள்ள இல்லங்களில் பூரண கும்பங்கள், இந்திராவின்படத்தோடு வைக்கப்பட்டு, மிகுந்தகவலை தோய்ந்த முகங்களுடன் ஊர்வலத்தை வரவேற்றனர். பின்னர் அஞ்சலிக்கூட்டம் ஆலயப்பரிபாலன சபைத்தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்றது.

நாரந்தனை, சரவணை வாழ் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்திலும், அஞ்சலிக்கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஆலயப்பிரதம குருக்களை சிவ ஸ்ரீ சு. சிவபாலக்குருக்கள் ஆலய பரிபாலன சபைஉப தலைவர் திரு. இ நகுலேசபிள்ளை நாரந்தனை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையச் செயலாளர் திரு. க. சகாதேவன் சரவணை பாரதிசன சமூகநிலைய உபதலைவர் திரு. க. தவபாலன், செயலாளர் செல்வன் சி. மகேந்திரன் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச. நெறியாளர் குழு உறுப்பினர்கள் திரு தி. சுந்தரலிங்கம், திரு. பே. சந்திரசேகரம், செல்வன் த. மயூரநாதன், செல்வன் ஐ மகேந்திரன், செல்வி. முத்துலிங்கம், செல்வன் ந. விஜயகுமார் ஆகியோர் அஞ்சல் உரை நிகழ்த்தினர்.

## யாழ். அரசினர் ஆஸ்பத்திரி சிற்றூழியருக்கு ஓய்வுவிடுதி

[கொழும்புத்துறை]

யாழ். அரசினர் பொது வைத்தியசாலைச் சிற்றூழியர்களின் நீண்டகாலக் குறையைப் போக்கும் முகமாக சிற்றூழியர்களுக்கான ஓய்வு விடுதி யொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சுகாதாரசேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளையின் முயற்சியைத் தொடர்ந்து இந்த ஓய்வு விடுதி சிற்றூழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கத்தின் வடபிராந்திய பிரதிநிதி திரு. மு. சங்கரன் வடபகுதி சுகாதார அத்தியட்சகர் யாழ். வைத்தியசாலை வைத்திய அதிபர் ஆகியோருக்கு மகஜர்களைக் கையளித்து இவ் வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் ஓய்வு விடுதி இன்றி அனுபவித்து வரும் கஷ்டங்களைப் பற்றி நேரில் சுட்டிக்காட்டியிருந்தார்.

யாழ். அரசினர் வைத்தியசாலை [பெரியாஸ்பத்திரி] ஆரம்பமான காலம் தொடக்கம் இவ் வைத்தியசாலைச் சாதாரண சிற்றூழியர்களுக்கு இவ் வைத்தியசாலையில் ஓய்வுவிடுதி இல்லாமலிருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

### அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரத்தை முள்ளியான் முஹியிதீன் பள்ளிவாசல் சங்கத்தின் சார்பில் அதன் பொருளாளர் ஜனாப் எஸ். ஏ ஸி. சஹாப்தீன் புதிய பிரதமர் ரஜீவ் காந்திக்கு அனுப்பிவைத்துள்ளார்.

# "அணுவாயுத எதிர்ப்பு; கொள்கை' இந்தியா 'தொடர்ந்து குரல் கொடுக்கும்"

## வெளிநாட்டுத் தலைவர்கள் மத்தியில் ரஜீவ்

[புதுடில்லி]

அணு ஆயுத எதிர்ப்பு, உலக அமைதி, அணிசேராக் கொள்கை ஆகியவற்றுக்கு தொடர்ந்து தமது நாடு குரல் கொடுக்கும் என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி குறிப்பிட்டுள்ளார்

தம்மைச் சந்தித்த வெளிநாட்டுத் தலைவர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சோவியத் பிரதமர் திக்கனேவ், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சர், ஸம்பியா ஜனாதிபதி கென்னத் கவுண்டா, ஜபபானிய பிரதமர் நாகசோனே, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ஸ், சைப்பிரஸ் ஜனாதிபதி, பூட்டான் மன்னர், ஆப்கானிஸ்தான் பிரதமர், அயர்லாந்து பிரதமர், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் உட்பட பல வெளிநாட்டுத் தலைவர்கள் புதிய பிரதமரைச் சந்தித்துப் பேசினார்கள்.

திருமதி இந்திரா காந்தியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த பல வெளிநாட்டுத் தலைவர்களும் தற்போது தமதுநாடுகளுக்குப் புறப்படத் தொடங்கிவிட்டார்கள்.

## பிரார்த்தனை

(ஊரெழு)

மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையொன்று சுன்னுகம் ஸ்ரீகதிரமலை சிவன் கோவிலில் நடாத்தப்பட்டது இப்பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பிரமுகர்களும் பொதுமக்களும்பிரார்த்தனையில் கலந்துகொண்டு பிரார்த்தித்தனர்.

## சிமெந்துத் தொழிற்சாலையில் அனுதாபம்

(ஊரெழு)

மறைந்த பாரதப் பிரமர் திருமதி இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சாங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலும், லங்கா சீமெந்து நிறுவனத்திலுமுள்ள அதன் சகல வேலைப்பகுதிகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்ததுடன் மேற்படி நிறுவனங்களின் வாகனங்களிலும் கறுப்புக்கொடிகள் காணப்பட்டன. சில வேலைப்பகுதியினரால் தனித்தனியாக அஞ்சலி செலுத்தும் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டிருந்தன.

லங்கா சிமெந்து நிறுவனத்திலுள்ள 'கோபுர பாரம்தூக்கி' எனப்படும் மிகவும் உயர்ந்த பாரம்தூக்கியின் உச்சியில் கறுப்புக்கொடியொன்று பறக்கவிடப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

## திருமண வீட்டில் புராணபடனம்

[யாழ்ப்பாணம்]

திருமண வீட்டில் பார்வதி கல்யாணம் புராணப் படிப்பு பிரதான நிகழ்ச்சியாக சமீபத்தில் ஒரு வீட்டில் நடைபெற்றிருக்கிறது.

நல்லை ஆதீன முதல்வர் முன்னிலையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள பல புராண உரைகாரரும்,புராணம் படிப்போரும், பங்குபற்றி சிறப்பித்திருக்கின்றனர்.

சித்தாந்த பண்டிதர் டாக்டர் நா. கனகரத்தினத்தின் புதல்வியின் திருமணத்தை ஒட்டி அவர் வீட்டில் திருமண நாளுக்கு முதல் நாள்,இப் புராண படலம் நடைபெற்றிருக்கிறது. [க]

## நெடுந்தீவு படகு சேவை குறைப்பால் மக்கள் கஷ்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு- குறிகாட்டுவான் அரசின் படகுச் சேவை மூன்றிலிருந்து இரண்டாகக் குறைக்கப்பட்டதால் நெடுந்தீவுப் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமுறுகின்றார்கள். தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் படகுச் சேவையையும் குறைத்ததால் மக்களின் வெளியூர்த் தொடர்புகள் குறைந்ததுடன் அவசிய தேவைகளுக்காக பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து தனியார் படகை வாடகைக்கு அமர்த்தி செல்லவேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெடிக்காத குண்டை வெடிக்க வைத்தனர்

(கொழும்புத்துறை)

நேற்று திங்கட்கிழமைகாலை யாழ். கச்சேரிப் பகுதியில் குண்டொன்று பயங்கரசத்தத்துடன் வெடித்தது யாழ். கச்சேரியில் வைக்கப்பட்டு வெடிக்காமலிருந்த குண்டே இராணுவத்தினரால் வெடிக்கவைக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை யாழ். கச்சேரியில அரசாங்க அதிபரால் நடாத்தப்பட்ட பாதுகாப்பு மகாநாட்டின் போது குண்டுவீச்சுச் சம்பவம் இடம்பெற்றது. இக் குண்டுவீச்சின் போது குண்டொன்று வெடிக்காமல் இருந்தது.

திங்கட்கிழமை காலை யாழ் செயலகத்திற்கு வந்த இராணுவத்தினர் இக் குண்டை பழைய பூங்காவில் வைத்துப் பாதுகாப்புடன் வெடிக்கவைத்தனர்.

இது இவ்வாறிருக்க யாழ் செயலகத்தில் அலுவலாக வந்து நின்ற வாலிபரொருவரையும் பாதுகாப்புப் படையினர் அழைத்துச் சென்றுள்ளனர்.

## புங்குடுதீவில் மோட்சதீபம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் மோட்ச தீபமும், மௌன ஊர்வலமும் நறைபெற்றது. புங்குடுதீவு தென்காடு சிவன்கோவில்வீதியில், நந்த அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த நாகேந்திரக் குருக்கள் மறைந்த தலைவர் இந்திராவின் ஆத்ம சாந்திக்காக மோட்ச தீபத்தை ஏற்றினர். குறிகாட்டுவானிலிருந்து தனியார்துறை வாகனங்களும், சைக்கிள் ஊர்வலமும் அஞ்சலிக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்துசேர்ந்தன. ஆசிரியர் சி மாணிக்கம், சு. குணரத்தினம், புலவர் ஈழத்து சிவானந்தன், சோ. சச்சிதானந்தன், இரா.இராசகுமார் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

## குண்டு வெடித்த இடம்

(ஊரெழு)

யாழ். பலாலி வீதியில் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் நடைபெற்ற மேற்படி குண்டு வெடிப்பின் காரணமாக வீதியின் மத்தியிலுள்ள அந்த இடம் பெரும் புதைகுழியாகக் காணப்படுகிறது.

## பிரஜைகள்குழு கண்டனம்

[புலோலி]

"பருத்தித்துறை தபால் நிலைய ஊழியர்கள் அடிக்கடி கடமை நேரங்களில் ஆயுதப் படையினரால் தாக்கப்படுவதனால் தபால் நிலைய நடவடிக்கைகள் ஸ்தம்பித்து வருகின்றன, இதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்படைந்து வருகின்றனர்" என்று பருத்தித்துறை பிரஜைகள்குழு வன்மையாகக் கண்டித்துள்ளது,

## எம். ஜி. ஆர். பேரில் ஏழைகளுக்கு அன்னதானம்

[மட்டுவில்]

மட்டுவில் தெற்கு கலைவாணி சனசமூக நிலையம் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரனின் உடல் நலம் வேண்டி ஏழைகளுக்கு அன்னதானம் செய்தனர்.

தென் மட்டுவிலூர் வேரற்கேணி கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெற்றது

## யாருடையது?

சுழிபுரம் நெல்லியான் வீதியைச்சேர்ந்த திரு. செல்லப்பா சேனாதிராசா என்பவரின் அடையாள அட்டை, வங்கி பாஸ் புத்தகம் உட்பட சில ஆவணங்களை திரு. ஆர். குமாரும் மன்னாரைச் சேர்ந்த விமோசனலட்சுமி திருஞானசம்பந்தன் என்பவரின் அடையாள அட்டையை திரு. இ. சோதிலிங்கமும் கண்டுஎடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## அண்ணாசாமி ஆசிரியர்

அண்ணா நின் சேவையுள்ளம்
அருங்கலை உயிர் ஓவியங்கள்
எண்ணாத நவ நாடகங்கள்
எதிலுமே தனி எத்தனங்கள்
பண்ணில் பக்திப் பாசுரங்கள்
பந்தாடலில் பல வெற்றிகாணல்
தண்ணளித் தமிழ் மன்றமைத்தீர்
தமியேன் நினைந்து அழுகின்றேன்

—மட்டுவில் சின்னத்தம்பி

# இப்படியும் நடக்கிறது

நேற்றுக் காலை, எட்டரை மணிபிருக்கும். 'ஈழநாடு' வாசகர் ஒருவர், அலுவலகம் வந்தார். அவருடன் மற்றுமொருவரும் வந்திருந்தார்.

கவிதையொன்றைக் கையளித்து "பத்திரிகையில் போடுவீர்களா?" என்று கேட்டார். "இது உங்களின் சொந்த ஆக்கமா"? என்று நான் திருப்பிக் கேட்டபோது; உண்மையென்று கூறி, கவிதையைப் பாடியும் காட்டினார், கவிதையில் இரு பகுதிகள் இவை:

இமயமே எம் இதயமே இந்தியாவே எம் இந்திராவே!
தத்தெடுத்த எம்மையெல்லாம்
தவிக்கவிட்டுச் சென்றாயோ;
உரிமையற்ற எவருக்கும்
உரம்கொடுத்து வந்தாயே;
வகையற்ற எம்மையெல்லாம்
வரும் நாளில் காப்பார் யாரோ ......!

அடிக்குறிப்பு:

கவிதையைக் கையளித்துப் பாடிய நமது வாசகர் பெயர்: இ. மு. முகம்மது நலீம். விலாசம்: யாழ். மஸ்றவுத்தீன் பாடசாலை. மேலதிக விபரம்: இவரது வயது ஒன்பது. மூன்றாம் வகுப்பில் படிக்கின்றார்.

★ ★

தஞ்சையில் வரலாற்றுப் பெருமைமிக்க பிரகதீஸ்வரர் ஆலயத்தை நிறுவிய ராஜராஜசோழனின் சிலையை ஆலயத்துக்கு வெளியே தமிழக முதலமைச்சர் திறந்து வைத்தார்.

விழாவில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமானமக்கள் கலந்துகொண்டனர்.

தமிழக முதலமைச்சர் தமது உரையில்:

"விரைவிலேயே இந்த மாமன்னன் சிலையைப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களே கோவிலுக்குள் திறந்து வைக்கும் காலம் வரும்" என்றார் தமிழக முதல்வர்.

என்ன.... ஒண்ணுமே புரியல்லையா?

தஞ்சையில் மேற்படி ராஜராஜசோழன் சிலை திறப்பு விழா நடந்தது 1972ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதின் மூன்றாம் திகதி

சிலையைத் திறந்துவைத்தது அன்று முதலமைச்சராக விருந்த கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள்.

இன்னும் புரியவில்லையா?

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞர் கூறியது திர்க்கதரிசனமாகிவிட்டது!

அதுவும்; ராஜராஜசோழன் சிலையை கோவிலுக்குள் முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி திறந்துவைப்பார் என்று கலைஞர் அன்றே கூறியது......

கலைஞர் அன்று சொன்னார். அதுபோலவே கடந்த மாதம் தஞ்சைக் கோவிலுக்குள், மாமன்னனின் சிலையை திருமதி இந்திராகாந்தியே திறந்துவைத்தார்.

— 'ஊடுருவி'

## இந்திரா அஸ்தி...

(1-ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

சங்கள் யாவும் மீண்டும் புதுடில்லிக்குக் கொண்டுவரப்படும். தொடர்ந்து விமானத்தில் எடுத்துச் செல்லப்பட்டுப் பனிபடர்ந்த இமயமலைச்சாரல்களில் அன்னை இந்திராவின் அஸ்தி தூவப்படும்.

இந்தியாவின் பிரதான நதிகளிலும் அஸ்தி கலக்கப்படும். தீன்மூர்த்திபவனிலும் ஒரு கலசம் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். (கி)

## கொழும்பில்...

(1ம் பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

கிய தகவல்கள் பலகிடைத்திருக்கின்றதாம்.

மேல்விசாரணையின் பொருட்டு இவர்களை கொழும்புக்கு கொண்டு வருவதற்காக இரகசியப் பொலிசார் கொழும்புக்குச்செல்கின்றனர்

கைதுசெய்யப்பட்டுள்ள இம் மூவரும் பல்கலைக் ழக மாணவர்கள்தானா என்பதை உறுதி செய்ய பொலிசார் முயன்று வருகின்றனர்.

## நாட்டைஇருளில்—

(1-ம் பக்க3ம்கலத்தொடர்ச்சி)

ருந்ததாகத் தெரிவித்த பிரதமர், இந்தத் திட்டம்குறித்து தனக்குத் தெரியவந்ததால் தான் அதனை மக்களுக்குத் தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

எண்ணெய்க் குழாய்களுக்கு வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்திருந்தால் கொழும்பின் அவிரவாசிப்பகுதியே அழிந்திருக்கும் என்றும் அவர் கூறினார். (இ)

## பிரிட்டனில்...

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

மான திருமதி ஜனகலட்சுமி ராஜமோகன், திருமதி கிருஷ்ணப்பிரியா ஆனந்தராஜன் ஆகியோரும் கலந்துகொண்டனர். யாழ். கலைமன்றத்தில் பயின்று, திருமதி திரிபுரசுந்தரி யோகானநதத்திடம் கற்று அரங்கேறிய செல்வி ராதிகா பேரின்பநாயகத்தினால் லண்டன் நர்த்தனாலயம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனில் மூன்று மாத காலம் தங்கியிருந்த யாழ். கலைமன்றத்தினர் லண்டன், பர்மிங்ஹாம், மில்ரன் கீன்ஸ், மான்செஸ்டர், ஸ்கொட்லாண்ட் உட்பட பல்வேறு பகுதிகளிலும் பத்துக்கும் அதிகமான கலைநிகழ்ச்சிகளை நடத்தியதுடன் இரண்டு பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும் அரங்கேற்றி பிரிட்டிஷ் மக்களை மட்டுமின்றி அங்கு வாழும் தமிழ் கலாரசிகர்களையும்குதூகலிப்பில் ஆழ்த்தி தாயகம் திரும்பியுள்ளனர்.

## மறைந்தபிரதமர்...

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

வர்கள் கறுப்புப்பட்டி அணிந்து வந்து கையெழுத்துவைத்தார்கள்.

அனுதாப பதிவேட்டில் கையெழுத்திடுவது, இனிமேல் நீடிக்கப்படாது என்றும் இப் புத்தகங்கள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் நேற்றுத் தெரிவித்தார். (க)

### மணிவாக்கு

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டானென்று
உடம்பினையானிருந்து ஓம்புகின்றேனே.

— திருமந்திரம்.

## நமது நோக்கு

# டாக்டர்களின் மனவேதனை

கண்டிச் சம்பவத்தையிட்டுசிலவாரங்களுக்குமுன் அரசினர் வைத்திய அதிகாரிகள் சங்கம் மட்டுப்படுத்தப்பட்ட அரைநாள் வேலைநிறுத்தம் செய்தது பற்றி நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம்.

இன்னும் அந்த விடயம் தீர்க்கப்படாமலிருப்பதால் நேற்று சில ஆஸ்பத்திரிகளைத் தவிர நாட்டிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் டாக்டர்கள் வேலையை நிறுத்தி வெளியேறுவதாகக் கிடைத்த செய்தி வேதனைக்குரியது.

கடமையில் ஈடுபட்டிருந்த டாக்டர் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரால் தாக்கப்பட்டதே டாக்டர்கள் குறிப்பிடும் சம்பவம். சுகாதார அமைச்சு இன்னும் அதற்கேற்ற நடவடிக்கை எடுக்காதது பெரும் விந்தையே! குறிப்பிட்ட இச்சம்பவத்தின் சரி, பிழை பற்றி நாம் தீர்ப்பு வழங்க முன்வரவில்லை.

இது போன்ற சம்பவம் முன்னரும் நடந்திருப்பதால் இதற்குரிய நடவடிக்கை துரிதப்படுத்த வேண்டிய பொறுப்பு சுகாதார அமைச்சுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்துக்குரியது; இது ஒரு தனிப்பட்ட விடயம் அல்ல; டாக்டர்களின் பாதுகாப்பும், மதிப்பும் இந்த ஒரு சம்பவத்தால் பாதிக்கப்படுமாஎன்று வாதாடுபவர்கள் விடயம் விளங்காதவர்கள்: ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறே பதம்.

நாம் ஏன் அப்படிச்சொல்கின்றோம்? நாம் வாழும் சூழ்நிலை சட்டத்துக்கும், ஒழுங்குக்கும் எள்ளளவு மதிப்பும் கொடாத நிலை.

இத்தகைய சம்பவம்நல்லகாலம் (வடபகுதியில்நடைபெறவில்லை) கண்டியில் நடைபெற்றது. பாத்திரங்களும் தமிழர்கள் அல்ல. இன்றேல் இதுவும் ஒருவிதமான பயங்கரவாதமென்று சொல்ல அமைச்சர்கள் மட்டுமல்ல சில கொழும்புத் தினசரிகளே முன்னிற்கும். தெற்கில் நடப்பது எதுவும் பயங்கரவாதமல்ல என்ற மாயாவாதம் அனர்த்தங்களை அதிகரிக்கும்.

விடயத்தை விட்டு நாம் நழுவவில்லை. வன்செயல், பயங்கரவாதம் என்பதெல்லாவற்றிற்கும் வடக்குதான் 'சோல் ஏஜென்சி' அல்ல என்பதை வலியுறுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதனைப்பொருட்படுத்தாது போனவழியில் பிரசாரம் போவதானல் நாடெங்கிலும் தளர்ந்துவரும் சட்ட ஆட்சி சடுதியில் ஸ்தம்பித்து விடுவதுஆச்சரியமல்ல.இந்த எச்சரிக்கை வழங்கவேண்டியது எமது கடமை.

சட்டஆட்சிக்கு அச்சாணியானவர்காவற்படையினர். இன்று அவர்களுடைய பொறுப்பும் பாரமும் உயிரைக் கையிலேந்திய நிலை என்றால் அது மிகையாகாது. குறிப்பாக வடபகுதியில் அவர்களின் பணி அபாயமானது.

இதனை நன்குணர்ந்துதான் பொலிஸாரின் நடவடிக்கைகளை நாம்கணிக்கவேண்டும். ஆனல் பொலிஸாருக்கு மனநோய் ஏற்படும் சூழ்நிலை நாடெங்கும் உண்டு. அதனைக் கட்டுப்படுத்தும் பொறுப்புடையவர் நிலைமையை மோசமாக்கும்செயலில் ஈடுபடுவதானல் வேலி பயிரைமேய்ந்த கதைபோல் முடியும்; அதற்கு அரசு பொறுப்பில்லையென்று அலட்சியம் செய்யலாகாது.

டாக்டர்கள் சம்பள உயர்வுக்கோ வேறு தமக்குரிய சேவைவசதிகளுக்கோவேலை நிறுத்தம் செய்வதை நாம் அவசரப்பட்டு ஆதரிப்பதில்லை. அவ்விடயங்களில் பொறுமை மேலானது.

மருத்துவ சேவை உயிருக்கு அத்தியாவசியமான சேவை அத்தகைய சேவைக்கு எங்கிருந்தும் அச்சுறுத்தல் அனுமதிக்கலாகாது. கண்டிச் சம்பவம் இவ்வளவுதூரம், இவ்வளவு காலம் நீடிக்கவிட்டது நிசம். டாக்டர்களுக்கு மனவேதனை அளிக்கும் ஆற்றுக் கொடுமையில் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருப்பதாக நாம் கருதுகின்றோம்.

சாதாரண அசம்பாவிதங்களை மனித வேதனைக்கு நிவாரணமளிக்கும் தொண்டில் ஈடுபட்டிருக்கும் பெரியோர் பொருட்படுத்தப்படாது. 'வேலை நிறுத்தம்' மருத்துவ சேவை அகராதியில் இடம்பெறும் நிலை ஏற்படக்கூடாது.

இதனை உணர்ந்தே இந்தக் கட்டத்திலும் அவசர நோயாளிகளை கவனிக்கும் பொறுப்புக்கு வைத்திய சங்கம் ஒழுங்கு செய்திருக்கிறது.

நடைமுறையில் வேலை நிறுத்தம் ஒரு நாளைக்குத்தானும் பெரும் நட்டத்தை ஏற்படுத்தவல்லது. கடந்த கால அனுபவம் இதனைக் கற்பிக்கின்றது.

சுகவாழ்வும், மனிதபாதுகாப்பும் பொதுநல சேவையின் இரு கரங்கள். கைகொடுத்து தவறுக்கு மன்னிப்புக்கோரவும், அதனைப் பெருந்தன்மையுடன் வழங்கவும், அரசாங்கம் ஏற்பாடு செய்யவல்ல செல்வாக்கு இல்லாமல் போனதின் மர்மம் என்ன?

இப் பத்திரிகை வெளியாகுமுன் டாக்டர்களின் மனவேதனை மட்டுமல்ல மக்கள் சார்பில் எழுந்த எமது உள்ளக் குமுறலும் தீர்ந்துவிடவேண்டுமென்பதே எமது வேணவா.

டாக்டர்களின் சேவை அத்தியாவசியமான சேவையென்பதை யாரறியார்? ஆனல் அதனைப்பிரயோகித்து அவர்களை வேலைக்கழைப்பது மனவேதனையைத் தீர்க்கும் மருந்தல்ல.

### அஞ்சலி

[மட்டுவில்]

மட்டுவில் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பு மாணவர் உட்பட சுமார் 750 மாணவர் உண்ணாவிரதமிருந்து பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தினர், ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர்.

'சுகாதார திணைக்களத்துக்கு

# தாதிமாரைச் சேர்ப்பதில் பாரபட்சம் குளறுபடி!'

## ஜனதிபதியிடம் புகார்

(கொழும்புத்துறை)

சுகாதாரத் திணைக்கள ஊழியர்களிலிருந்து தாதிமார் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதில் பாரபட்சமும், குளறுபடியும் ஏற்பட்டுள்ளதாக ஜனதிபதியிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத்திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்க யாழ். மாவட்டப் பிரதிநிதி இதுசம்பந்தமான மகஜரொன்றை ஜனபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

பிரஸ்தாப மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''திணைக்கள ஊழியர்களிலிருந்து தாதிமார் பயிற்சிக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும், சேவை நிரந்தரம் உறுதிப்படுத்தப்பட்டவர்களும் சேவைமூப்பு உள்ளவர்களுமே இத்தாதிமார் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாமென்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனல் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தாதிமார் பயிற்சிக்குத் தெரிவானேரின் பெயர் பட்டியல் எமக்கு அதிர்ச்சியையும், கவலையையும் அளித்துள்ளது. அறிவுறுத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு மாருக சேவையில் உறுதிப்படுத்தப்படாதவர்களும் சேவைமூப்பு இல்லாதவர்களும் இத்தாதிமார் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இது எமக்கு ஏமாற்றத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே இவ்விடயம் பற்றி உடன் நடவடிக்கை எடுத்து மீளாய்வுசெய்து விமோசனமளிக்கவேண்டும்'' என்று அம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் சுகாதார சேவைகள் அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கும், இலங்கை சுகாதாரத் திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்கள் சங்கச் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## ''உலகநாடுகளுக்கு உணர்த்தியவர்''

[நெடுந்தீவு]

''பாரத மக்களின் நலனுக்கும் அவர்களது சுதந்திரமான இறைமைக்கும் பாதுகாவலராக மட்டுமன்றி உலமெங்குமுள்ள நசுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் திருமதி. இந்திராகாந்தி.நாம்துயருற்றபோது அவர்கள் அனதைகள் அல்லர் அவர்களின் உரிமைகளுக்கு அனைத்து மக்களுமே மதிப்பளிக்க வேண்டும் என்று உலக நாடுகளுக்கு உணர்த்தியவர்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் மறைவு குறித்து நெடுந்தீவு மக்களின் சார்பில் வெளியிட்ட இரங்கல் செய்தியில் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் கூறியுள்ளது.

## ''அவதானமாக அணுகியவர்''

(யாழ்ப்பபணம்)

மானிப்பாய் ப.நோ.கூ. சங்க ஊழியர் கருத்தரங்கில் தலைவர் திரு. சி.பொ.வ.க. முதலியார் பேசுகையில் ''இந்திராவின் மறைவு இலங்கைத் தமிழர்களுக்கு மிகவும் இழப்பு!

எங்கள் பிரச்னைகளை மிக அவதானத்துடன் அணுகி அவர் தீர்த்து வைக்க எடுத்த முயற்சிகளை என்றுமே மறக்க முடியாது'' என்று நினைவு கூர்ந்தார்.

ஊழியர் சார்பில் திரு.க. பாலசுந்தரம் உட்பட பலரும் பேசினர்.

இந்திராவின் மறைவையொட்டி மானிப்பாய் ப.நோ.கூ.சங்க ஊழியர்களுக்கு மூன்று நாள் விடுமுறை வழங்கப்பட்டது.

## நுணுவில் தேவாலயத்தில் ஆத்ம பிரார்த்தனை

(மட்டுவில்)

தென் இந்திய திருச்சபையின் நுணுவில்மண்டல தேவாலயத்தில் தமிழக முதலமைச்சர் உடல் நலமுற பாரதப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் ஆட்சி நிலைக்க அமரத்துவமெய்திய திருமதி. இந்திரா காந்தியின் ஆன்மா சாந்தி பெற விசேட பிரார்த்தனை வழிபாடுகள் செய்யப்பட்டன.

வண.பிதா மேதா இந்த வழிபாடுகளை நடத்தி வைத்தார்.

## பரு. கிழக்கிலும் மௌன ஊர்வலம்

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கில் மறைந்த இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்திக்கு அஞ்சலி செய்யும்வகையில் மௌன ஊர்வலங்களும், அஞ்சலிக் கூட்டங்களும் நடத்தப்பட்டன

அன்னை இந்திராவை தகனம் செய்த கடந்த சனிக்கிழமை நடந்த மௌன ஊர்வலத்திலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் கறுப்புப்பட்டியை அணிந்து கலந்துகொண்டனர்.

ஆழியவளை பாடசாலைக்கு அண்மையிலிருந்து புறப்பட்ட நான்கு மைல் நீள ஊர்வலம் உடுத்துறைக்கு ஊடாக கொடுக்கிளாயைச் சென்றடைந்து அஞ்சலிக்கூட்டம் நடத்தப்பட்டது.

மரதன்கேணியிலிருந்து புறப்பட்ட 8 மைல் நீள ஊர்வலம் தாளையடி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கிராமங்களுக்கு ஊடாகச் சென்றடைந்தது.

ற்றொரு அஞ்சலிக்கூட்டம் வெற்றிலைக்கேணியில் நடத்தப்பட்டது

ஊர்வலங்களில் சென்றோர் அஞ்சலிச்சுலோக அட்டைகளை ஏந்திச் சென்றனர்.

## இதயத்தைத் தொட்ட சரவணை ஊர்வலம்

(வேலணை)

இந்திராகாந்தியின் மறைவையொட்டி சரவணைபாரதி சனசமூகநிலையம் மௌனஊர்வலமும், அஞ்சலிக்கூட்டமும் நடத்தியது. பாரதிசனசமூக நிலையத்திலிருந்து மௌன ஊர்வலம் ஆரம்பமானது. ஊர்வலம் சென்ற வீதியெங்கிலுமுள்ள இல்லங்களில் பூரண கும்பங்கள், இந்திராவின்படத்தோடு வைக்கப்பட்டு, மிகுந்தகவலை தோய்ந்த முகங்களுடன் ஊர்வலத்தை வரவேற்றனர். பின்னர் அஞ்சலிக்கூட்டம் ஆலயப்பரிபாலன சபைத்தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்றது.

நாரந்தனை, சரவணை வாழ் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்திலும், அஞ்சலிக்கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஆலயப்பிரதம குருக்களை சிவ ஸ்ரீ சு. சிவபாலக்குருக்கள் ஆலய பரிபாலன சபைஉப தலைவர் திரு. இ நகுலேசபிள்ளை நாரந்தனை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையச் செயலாளர் திரு. க. சகாதேவன் சரவணை பாரதிசன சமூகநிலைய உபதலைவர் திரு. க. தவபாலன், செயலாளர் செல்வன் சி. மகேந்திரன் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச. நெறியாளர் குழு உறுப்பினர்கள் திரு தி. சுந்தரலிங்கம், திரு. பே. சந்திரசேகரம், செல்வன் த. மயூரநாதன், செல்வன் ஐ மகேந்திரன், செல்வி. முத்துலிங்கம், செல்வன் ந. விஜயகுமார் ஆகியோர் அஞ்சல் உரை நிகழ்த்தினர்.

## யாழ். அரசினர் ஆஸ்பத்திரி சிற்றூழியருக்கு ஓய்வுவிடுதி

[கொழும்புத்துறை]

யாழ். அரசினர் பொது வைத்தியசாலைச் சிற்றூழியர்களின் நீண்டகாலக் குறையைப் போக்கும் முகமாக சிற்றூழியர்களுக்கான ஓய்வு விடுதி யொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சுகாதாரசேவைத் தொழிலாளர் சங்க யாழ்.கிளையின் முயற்சியைத் தொடர்ந்து இந்த ஓய்வு விடுதி சிற்றூழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கத்தின் வடபிராந்திய பிரதிநிதி திரு. மு. சங்கரன் வடபகுதி சுகாதார அத்தியட்சகர் யாழ். வைத்தியசாலை வைத்திய அதிபர் ஆகியோருக்கு மகஜர்களைக் கையளித்து இவ் வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் ஓய்வு விடுதி இன்றி அனுபவித்து வரும் கஷ்டங்களைப் பற்றி நேரில் சுட்டிக்காட்டியிருந்தார்.

யாழ். அரசினர் வைத்தியசாலை [பெரியாஸ்பத்திரி] ஆரம்பமான காலம் தொடக்கம் இவ் வைத்தியசாலைச் சாதாரண சிற்றூழியர்களுக்கு இவ் வைத்தியசாலையில் ஓய்வுவிடுதி இலலாமலிருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

### அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரத்தை முள்ளியான் முஹியிதீன் பள்ளிவாசல் சங்கத்தின் சார்பில் அதன் பொருளாளர் ஜனப் எஸ். ஏ ஸி. சஹாப்தீன் புதிய பிரதமர் ரஜீவ் காந்திக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
நிச்சயதாம்பூலம்
தினசரி 3 காட்சிகள்

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30 4-45
Richard Pryor,
Jackie Gleason in
The Toy
Action - Comedy

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்)
இன்று மட்டும்
10.30, 2.00, 4.30, 6.45
EBONY - IVORY
and JADE
நாளை முதல
THE BODY

ஹரன் (யாழ். நகர்)
10-30, 2-30,
4-30, 6-30
இன்றுமுதல் குறிப்பிட்டசில
தினங்கள் மட்டும்
BLOOD OF THE
DRAGON
(பயங்கர சண்டைகள்
நிறைந்த படம்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10.30, 2. 30, 6.30
சிவாஜி - மஞ்சுளா
அன்பே ஆருயிரே
From 7-11-84
Daily 10-30, 2-30, 4-30
HERBIE GOES
TO BANANA
(Color)
A Full Lenth of
Commedy Film
(முழுநீள சிரிப்புப் படம்)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
Lee Van Cleef...
Ernest Bognine...
ESCAPE from
NEWYORK
பிரமாண்டமான சிறைக் கூடங்களில் — திகிலும் — பரபரப்பூட்டும் இரவுளில் கைதிகள் தப்பிச்செல்லும் சாகசங்கள் மெய் சிலிர்க்கவைக்கின்றன.

லிடோ சினிமா
Daily 4 Shows
CONAN THE
BARBARION

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4 45
MID NIGHT EXPRESS
[கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்]

மனோகரா (யாழ்நகர்)
தினசரி
10-30, 2-15 4-45, 7-00
Bruce Lee in
FIST of FURY
(Adults Only)
புரூஸ்லியின் திகிலூட்டும் பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த படம். இதுவே யாழ். நகரில்கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது
9-11-84 முதல்
பூவிலங்கு

# செய்திச்சிதறல்

## "தமிழன் தலைநிமிர்ந்து வாழவழி வகுத்தவர் எம். ஜி. ஆர்"

(கொழும்புத்துறை)

''ஈழத் தமிழினம் இன்னலுற்றபோது உடன் குரலெழுப்பித் தமிழன் தலைநிமிர்ந்து வாழ வழிவகுத்த தமிழகமுதல்வர் திரு. எம். ஜி. ஆர். சுகவீனமுற்றிருப்பது தமிழ் மக்களுக்குப் பெரும் நஷ்டமும், வேதனையும் அளிக்கின்றது. தமிழக முதல்வரின் சாதுரியமான நடவடிக்கைகளினுலேயே எமது இனத்தின் சுபீட்சப்பாதை திறக்கும் என்பது திண்ணம்''.

இவ்வாறு ஓய்வு பெற்ற கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய அதிபரான திரு. இரா. செல்வராசா தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் நோய்குணமடைந்து சுகம் பெற வேண்டிக் கொழும்புத்துறை கடற்ருெழில் விரிவாக்க சேவா சங்கத்தினர் மேற்கொண்ட உண்ணுவிரதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.

கொழும்புத்துறை உப்புக்குளம் அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்த உண்ணு விரதத்தில் நூறு பேர் ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ க. மு. ஜெகந்நாதக் குருக்கள் எம். ஜி. ஆர். பெயரில் விசேட பூஜைகளை நடத்தினுர்.

காலை 8 மணிக்கு ஆரம்பமான இந்த உண்ணுவிரதம் மாலை 6 மணிக்கு முடிவுற்றது. நாள் முழுவதும் எம். ஜி, ஆர். குணம் பெற வேண்டிப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

### தென்னிலங்கை தொழிற்சங்கவாதி யாழ். விஜயம்

(வண்ணூர்பண்ணை)

யாழ். மாவட்ட நிலைமைகள் குறித்து நேரில் அறிந்து கொள்ள யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. எச். என். பெர்ணுன்டோ நான்கு தினங்கள் இங்கு தங்கியிருந்து இப்பகுதியின் பாதிப்புக்கள் பற்றிய விபரங்களைச் சேகரித்துச் சென்ருர்.

பாதிக்கப்பட்ட பாடசாலைகள், கல்லூரிகளைப் பார்வையிட்டதுடன் ஆசிரியர்களையும், பெற்ருேரையும் பல இடங்களிலும் சந்தித்து உரையாடினுர்.

யாழ்ப்பாணத்தின் உண்மையான நிலைமைகளை தென்னிலங்கை சிங்களப் பத்திரிகைகள் மூலம் அறிய முடியாமல் இருப்பதாகவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

### சனசமூக நிலையங்களின் பணி

(வண்ணூர்பண்ணை)

''சனசமூக நிலையங்கள் படிப்பகங்களை நடத்தி பத்திரிகைகளை வழங்குவது மட்டும் தமது பணியாகக் கருதிவிடக்கூடாது. தத்தமது பகுதி மக்களுக்கு சகல துறைகளிலும் பணிபுரிவதற்கு சனசமூக நிலையங்கள் முன்வர வேண்டும்.''

பொன்னுலை தெற்கு இளஞ்சுடர் சனசமூக நிலைய விசேட செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியச் செயலாளர் திரு சி. சி. வரதராசா இவ்வாறுதெரிவித்தார்.

நிலையத் தலைவர் திரு. க. மகாலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

### பிரார்த்தனை

[சுழிபுரம்]

தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் பூரண சுகம் அடைந்து மீண்டும் மக்களுக்கு சேவை செய்ய சுழிபுரம் பெரியபுலோ அரசடி ஸ்ரீ ஞான வைரவர்ஆலயத்தில்பிரார்த்தனையும் வழிபாடும் நடைபெற்றது. சுழிபுரம் பெரிய புலோ அண்ணு சன சமூக நிலைய விழிப்புக்குழுத் தலைவர் திரு. செ. முருகன் தலைமையில் பிராத்தனை நடைபெற்றது.

### "வீடுகள் தோறும் நூலகங்கள்"

(மாவிட்டபுரம்)

''கிராமம் தோறும் நூலகங்கள் அமைவதுடன் வீடுகள் தோறும் நூலகங்கள் அமைந்தால்தான் மாணவர்களுடைய பொது அறிவை விருத்தி செய்யலாம்.''

இவ்வாறு வீமன் காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசா மாவை கலைப் பெருமன்ற சனசமூக நிலையத் திறப்பு விழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினுர்.

மேற்படி சனசமூக நிலைய புதிய கட்டிடத்தை சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்,

திரு. கணபதிப்பிள்ளை, திரு. அன்னுச்சாமிஐயர், திரு. வயிரவப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

### சிரமதானம்

(மட்டுவில்)

''விவசாயத் துறை அபிவிருத்தித் தேவைகளுக்கு இப்பகுதி விவசாயிகள் அரசாங்கத்தின் கையை எதிர்பாக்காதுகூடியவரையில் சிரமதான மூலம் சிறு சிறு அபிவிருத்தி வேலைகளை கூட்டுறவுடன் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.''

இவ்வாறு மட்டுவில் நுணுவில் கைதடிப் பகுதி விவசாயப் பெரும்பாக உத்தியோகஸ்தர் திருமதி. முருகேசு, அல்லிக்கரை, விளைவேலி, அம்பலந்துறை வயல் வெளிகளின் பிரதான வெள்ள வாய்க்கால் சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மட்டுவில் பகுதி விவசாய உத்தியோகத்தர் திரு. சி. கந்தசாமி இச் சிரமதானப் பணிக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

### மரம் நாட்டு விழா

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றலில் மரம் நாட்டுவிழா அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு மகாராஜ் ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் யாழ். விவசாய உதவிப் பணிப்பாளர் திரு கிருஷ்ணபிள்ளை, விவசாய உதவி அதிபர் திரு பரமானந்தம் உட்படபலர் மரம் நாட்டி வைத்தனர்.

### வித்தியாலய வெள்ளி விழா

(கொழும்புத்துறை)

கட்டுவன்புலம் மகாவித்தியாலய வெள்ளிவிழா இவ்வாண்டு இறுதிக்குள் நடைபெறவுள்ளது. வெள்ளி விழாவையொட்டி மகாவித்தியாலயத்தின் புதிய அலுவலகமும் திறந்து வைக்கப்படும்.

இம் மகாவித்தியாலய அதிபர் திரு. க. இராசதுரை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ருர்.

### தலைமை ஆசிரியர் பிணையில்

(மாவிட்டபுரம்)

தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட கேகாலை பாடசாலை தலைமை ஆசிரியரை பிணையில் செல்ல மல்லாகம் நீதிபதி அனுமதித்தார்.

வர்த்தலைவிளானைச் சேர்ந்த சின்னப்பு நடராசா என்பவரை தாக்கி கடுங்காயம் விளைவித்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசாரின் கோரிக்கையையடுத்து கேகாலைப் பொலிசார் கேகாலை பாடசாலை ஒன்றில் தலைமையாசிரியராக இருக்கும் சுப்பிரமணியம் என்பவரைக் கைதுசெய்து கேகாலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

கேகாலை நீதிபதியின் கட்டளைப்படி இவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு மனோ சிறிதரன் இவரை பிணையில் விடவேண்டும் என்று கோரினுர்.

காங்கேசன்துறை பொலிசார் பிணையில் விடுவதை ஆட்சேபித்தனர். இறுதியில் மல்லாகம் நீதிபதி திரு சி வி. விக்கினேஸ்வரன் இவரை 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

### புதியகழகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரத்தில் இப்பகுதிகிராம முன்னேற்றச்சங்கம், சனசமூகநிலையம் ஆகியவற்றின் ஆதரவுடன் விளையாட்டுக்கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

### சாரணீய கைநூல்

(கொழும்புதுறை)

சாரணீயம் பற்றிய கைநூல் ஒன்று விரைவில் தமிழில் வெளியிடப்படவுள்ளது. நல்லூர்த் தொகுதித் திரிசாரணர்கள் இந்நூலை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்

இவ்வருடம் திரிசாரணர் அபிவிருத்திவருடமாக கணிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சாரணர்களுக்கு மிக அவசியம் தேவையான சாரணீயக் கைநூலைத் தமிழில் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### மாடுவளர்ப்பு

(கிளிநொச்சி)

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உருத்திரபுரம் பகுதியில் மாடுவளர்ப்புத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று கிளிநொச்சி கச்சேரியில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

உருத்திரபுரம் பகுதியிலிருந்து 35 பேர் இத்திட்டத்திற்கு தெரிவாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் 30 பேருக்கு மாடுகள் வழங்கப்படவுள்ளதாகவும் மாடுகளின் விலை அதிகமாக இருக்கும் பட்சத்தில் 25 அங்கத்தவர்கள் இத்திட்டத்தில் முதல் பயனடைவார்கள் எனவும் பிரஸ்தாப கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

### நிர்வாகிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரம் கிராம முன்னேற்றச்சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினுர்கள்.

காப்பாளர்கள்:- டாக்டர் கே. வி.கே. திருலோகமூர்த்தி, எஸ். தில்லையம்பலம், கே. அமிர்தநாதர். தலைவர். இ. நடராசா, உபதலைவர்கள்:- க ஆறுமுகம், அ. யோகேஸ்வரன், செயலாளர்:- ம சதாசிவம், உபசெயலாளர்:- வை. தியாகராசா, பொருளாளர்:- அ அ சுப்பிரமணியம், கணக்குப்பரிசோதகர் திரு பத்மநாதன், 7 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவானுர்கள்.

### திருவாசக விழாவும் சிவபூசை மகாநாடும்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் டிசம்பர் 28ம் திகதி முதல் ஜனவரி 6ம் திகதி வரையிலான திருவெம்பாவை நாட்களில் திருவாசக விழா சிவபூசை மகாநாடு என்பன நடைபெறுவதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

ஆத்மார்த்தமாகச் சிவபூசை செய்யும் பலரை ஒன்றுகூட்டி ஒரே இடத்தில் சிவபூசை செய்யக் கூடியதான சந்தர்பத்தை ஏற்படுத்துகின்ற சிவபூசை மகாநாடு திருக்கேதீச்சரத்தில் நடைபெறும் தனிச்சிறப்பு நிகழ்ச்சியாகும். திருவெம்பாவைக் காலத்தில் திருவாசக மடத்தில் வாதவூரபுராணபடமும் நடைபெறும்.

திருவாசக மாநாடு சிவபூசை மாநாடு ஆகியவற்றுக்கான ஒழுங்குகளை ஈழத்துச் சிவனடியார் கூட்டத்தைச் சேர்ந்தவரும் திருவாச மடபரிபாலகருமாகிய திரு சரவணமுத்து சுவாமிகள் மேற் கொண்டுள்ளார். (ப)

### ஆய்வரங்கு

(பண்டத்தரிப்பு)

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் திருவழிபாட்டு ஆய்வரங்கு பண்டத்தரிப்புதியான இல்லத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றது. யாழ். பேராயர் அதி. வந். கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை இந்த ஆய்வரங்கை ஆரம்பித்து வைத்தார். ''வாழ்வும் வழிபாடும்'' என்ற விடயத்தை மையப்பொருளாகக் கொண்டு நடைபெற்ற மேற்படி ஆய்வரங்கில் ''திருவழிபாட்டு மறுமலர்ச்சி'', 'வழிபாட்டில் அடையாளங்கள்'', ''பண்பாட்டில் வழிபாடு'' ஆகிய பல்வேறு தலைப்புகளில் விசேட சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

### 'மனித குலத்திற்கு பேரிழப்பு'

(யாழ்ப்பாணம்)

''அணிசேரா இயக்கத் தலைவியும், அரசியல் ஞானியும் உலகளாவிய ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உரிமைக்குரல் கொடுத்தவருமான, பாரதப் பிரதமர் அன்னை இந்திராவின் மறைவு மனித குலத்திற்கே பேரிழப்பாகும். இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்காகத் தன் உயிரைத் துச்சமென மதித்த இந்திரா அம்மையாரின் பேரிழப்பினுல் அல்லலுறும் பாரத மக்களின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்ருேம்''

இவ்வாறு அராலி வடக்கு அந்தியகால சேவைச் சங்கம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளது.

### சுவாமி சித்ருபானந்தா இரங்கற்செய்தி

(யாழ்ப்பாணம்)

''உலகம் போற்றும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மறைவு நம் அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகும். இனி நம்துயரைத் துடைக்க இவரைப்போல் ஒருவர் கிடைக்கவேண்டும். பல இன்னல்களிலிருந்து காத்த தாய் போன்றவரை நாம என்றும் மறக்க கூடாது அவரின் ஆன்மா இறைவனின் திருவடியில் சாந்தி அடைவதாகுக''

இவ்வாறு சுவாமி சித்ருபானந்தா பாரதப் பிரதமர் அன்னை இந்திராவின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கற்செய்தியில் தெரிவித்துள்ளார்.

# அழகிய இளம் பெண் கோரக் கொலை!

## விசாரணையில் புதிய தகவல்கள்

(மட்டக்களப்பு)

அழகிய இளம்பெண்ணொருவர் கடத்தப்பட்டு பலாத்காரம் பிரயோகித்து கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்!

இவர் சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்ட ஏழு தீவிரவாதிகள் கொண்ட குழுவொன்றினால் கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டது.

பொலிசார் இவர்களை விசாரணை செய்த போது, தாங்கள் இப்பெண்ணை கொலை செய்து, புதைப்பதற்கு முன்னர், இப்பெண்மீது பல தடவைகள் பலாத்காரம் பிரயோகித்ததாக தெரிவித்துள்ளனர்.

இப்பெண்ணின் சடலத்தை தோண்டி எடுப்பதற்கு மட்டக்களப்பு பொலிசார் நீதிமன்றத்தின் அனுமதியை எதிர்பார்த்துள்ளனர்.

இப்பெண் புதைக்கப்பட்ட இடத்தை பொலிசார் பலத்த கண்காணிப்புச் செய்து வருகின்றனர்.

பிளவு பட்ட இத்தீவிரவாத குழுவின் தலைவரான நிமலராஜ் தனது சகாக்களினால் கொல்லப்பட்டுள்ளார்.

தமது தலைவர் வங்கிகளில் கொள்ளையடிக்கப்பட்ட தங்கத்தையும், நகைகளையும் தம்மிடமிருந்து கொள்ளையடிக்க முயன்றதினாலேயே தாங்கள் அவரைக் கொலை செய்ததாக பொலிசாருக்கு இவர்கள் தெரிவித்துள்ளனர்,

தீவிரவாத நடவடிக்கைகளை ஆரம்பித்த காலத்தில் தங்களிடம் ஒரு பிஸ்டலும், பல போலி பிஸ்டல்களும் இருந்ததாக இத்தீவிரவாதிகள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

இத்தீவிரவாதிகள் பெருமளவிலான தங்கத்தையும், துப்பாக்கியொன்றையும் வைத்திருந்ததையும் பொலிசார் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# அஞ்சலி வேளையில் பீரங்கி வேட்டுக்கள்!

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை மாலை மாதகல் பகுதியில் அன்னை இந்திரா மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அவ்வேளை மாதகல் கடல் பகுதியிலிருந்து 3 தடவைகள் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதனால் மக்களிடையே சிறிதளவு பதட்டம் ஏற்பட்டது. இதேவேளை இப்பகுதியில் விரிவான முறையில அன்னை இந்திராவின் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

மாதகல் வீரபத்திரர் கோவிலடியில் இந்திரா உருவப் படம் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. வீதிகள் தோறும் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. பூரண கடையடைப்பும் மேற்கொள்ளப்பட்டது (கி)

### இவ்வாரம்..

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

திரா அஞ்சலி நிகழ்ச்சி ஒன்றை நடாத்தியது.

இவ்வார ஒலிபரப்பு இந்திரா மறைவை யொட்டிய சிறப்பு ஒலிபரப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டது. தினமும் காலை 7 மணிமுதல் 8-30 மணி வரையும், மாலை 4 மணிமுதல் 5 மணிவரையும் இந்த இரகசிய அஞ்சலி ஒலிபரப்புச் சேவை இடம் பெறும்.

இதேவேளை இந்த ஒலிபரப்புகள் யாவும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இடம் பெறுமென்றும் அந்த ஒலிபரப்புக்கூறியது (கி

## மத்திய கிழக்கில் தொழில்வாய்ப்பு குறைகிறது

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்களுக்கான தொழில் வாய்ப்புக் குறைய ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சவூதி அரேபியா, குவைத், ஆகியநாடுகளிலேயே தொழில் வாய்ப்பு பெருமளவில் குறைந்துள்ளது.

## கரந்தன் குளத்தில் இளைஞர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப்பகுதியில் ஆயுதப்படையினரின் தேடுதல் வேட்டை அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற தேடுதல்வேட்டையின் போது கிளிநொச்சி கரந்தன் குளத்தில் இளைஞரொருவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்த இளைஞர் வசித்துவந்த குடிசையும் தீக்கிரையாக்கப்பட்டது.

கிளிநொச்சி 156ம் கட்டையிலும், மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளிலும் கடந்த ஒரு வாரமாக பல இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டும், விசாரணைக்காக அழைத்துச் செல்லப் பட்டுமுள்ளனர்.

### மரணதண்டனை...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

யாலயத்துக்கருகிலுள்ள மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது. ஆனால் இச்சடலம் அருகே இறந்தவர் பற்றிய விபரங்களை வெளியிடும் எதுவித அறிவித்தல்களும் காணப்படவில்லை.

இச்சம்பவம் பற்றிக்கூறப்படுவதாவது கொலையுண்ட கந்தசாமி சுதந்திரராஜா தமது நண்பர்களான சுந்தரலிங்கம்சுபாஸ்கரன், நாராயணபிள்ளை காந்தன் ஆகியோருடன் 'எ 40' கார் ஒன்றில் நேற்றுமுன்தினமிரவு வந்துள்ளார்.

இவர்கள் படம் பார்த்துவிட்டு தொலைக்காட்சிப் பெட்டியொன்றை அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்த பின்னர் திரும்பிவந்தனராம். அப்போது வாகனங்கள் சிலவற்றில் வந்த சீருடை அணிந்த துப்பாக்கிநபர்கள் இவர்களை இடைமறித்ததாகவும் இதனைத் தொடர்ந்து கந்தசாமி சுதந்திரராஜா கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கொலையுண்டவர் சென்ற காரும் அவருடன் வந்த நண்பர்களும் துப்பாக்கி நபர்களால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்த சுதந்திரராஜாவின் சடலத்தை அவரது தந்தையாரும் உறவினர்களும் அடையாளம் காட்டினர்.

கிளிநொச்சி பொலிஸ் அதிரடிப் பிரிவினர் ஸ்தலத்துக்கு வந்து சடலத்தைக் கொண்டு சென்று கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்த்தனர்.

இறந்தவர் கிளிநொச்சி நாலாம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர் சென்ற காரையும் இவரது நண்பர்களையும் தேடும் வேலைகள் நடைபெறுகின்றன.

இவரது பிரேதபரிசோதனை கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப் பட்டது. இச்செய்தி எழுதும் வரை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. (கி)

## யானை விரட்டுவதில் இளைஞர்கோஷ்டி தீவிரம்!

(கிளிநொச்சி)

காட்டு யானைகளை விரட்டுவதில் முறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கோஷ்டியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உயிர்ச் சேதங்களையும், பயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தும் பல காட்டுயானைகள் குடிமனைப் பகுதிகளுக்கு நகர்ந்ததையடுத்தே மேற்படி நடவடிக்கையில் இளைஞர் கோஷ்டி இறங்கியது.

இந்த இளைஞர் கோஷ்டி ஆயுதங்களுடன் யானைவிரட்டும் பணியில் வெற்றி கண்டிருப்பதுடன், தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கி)

### எம். ஜி. ஆர் ..

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

பெற்றுவிட்டார் என்று மருத்துவ அறிக்கைகள் கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையில் அவரை அமெரிக்காவுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் இரா நெடுஞ்செழியன் நிருபர்களிடம் தெரிவித்தார்.

நியூயோர்க்கிலுள்ள புறக்கிலின் மருத்துவ மனையில் முதலமைச்சருக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

மருத்துவமனையில் அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் முதலமைச்சரை பரிசோதனை செய்த பின்னரே அவருக்கு எத்தகைய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்பதனை முடிவு செய்வார்கள்.

முக்கியமாக சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அளிப்பது அவர்களின் முடிவைப் பொறுத்தே அமையும் என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

''சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்கா செல்லும் முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன் விரைவில் குணமடைந்து நாடு திரும்பவேண்டும்'' என்று பிரதமர் திரு ரஜீவ் காந்தி வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

நேற்று தமிழக நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியனுடன்தொலைபேசியில் தொடர்புகொண்டு இதனை அவர் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. பி வி நரசிம்மராவ், இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு கருப்பையா மூப்பனார் ஆகிய இருவரும் விமான நிலையத்தில் வந்து முதலமைச்சரை வழியனுப்பி வைத்தனர்.

திரு நரசிம்மராவ், பிரதமர் ரஜீவ் காந்தியினால் அனுப்பப்பட்டு விசேட வாழ்த்துச்செய்தியை அமைச்சர் நெடுஞ்செழியனிடம் கையளித்தார்.

முதலமைச்சரின் மனைவி திருமதி ஜானகி அமெரிக்கப் பயணம் தொடர்பாக விடுத்துள்ள செய்தியில் முதலமைச்சர் விரைவில் குணமடைய நாடுமுழுவதிலும் விசேட பிரார்த்தனைகளை நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

## மரண அறிவித்தல்
### சுப்பிரமணியம் நடராசா

இளைப்பாறிய தபால் அதிபர் சுப்பிரமணியம் நடராசா காலமானார். அன்னார் கோப்பாய், யாழ்ப்பாணம், புத்தளம், கொழும்பு, இரத்தினபுரி ஆகிய தபால் கந்தோர்களில் தபால் அதிபராக கடமையாற்றியவரும், இராசாத்தியம்மாவின் அன்புக் கணவரும் இராசம்மா, தங்கநாயகம், துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லம், முருகமூர்த்தி கோவிலடி, பிரான்பற்று மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அறிவிப்பவர்
நா. தங்கராசா.

(599)

## மரண அறிவித்தல்
### வல்லிபுரம் கந்தையா (J. P.)
(RETIRED CUSTOMS OFFICER)

வல்லிபுரம் கந்தையா ஞாயிற்றுக்கிழமை 4-11-1984ல் இங்கிலாந்தில் காலஞ்சென்றுவிட்டார். இவர் கண்ணகி அம்மாளின் அன்புக்கணவரும், விக்கினேஸ்வரராஜா (Sub collector), டாக்டர் சோமசுந்தரராசா, பூபாலராசா (பொறியியலாளர்), புஷ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மகேஸ்வரி, டாக்டர் ஜெகதீஸ்ரி, பாலஜோதி (பொறியியலாளர்), தயாளினி (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமனுருமாவர். அன்னாரது ஈமச் சடங்குகள் இங்கிலாந்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

77, MOORPROFT ROAD,
Morseley,
Birmingham.

(589)

## மரண அறிவித்தல்
### திரு. சி. சரவணமுத்து

தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சி. சரவணமுத்து காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக்கணவரும், தங்கராசா (இளைப்பாறிய தபால் அதிபர்), புனிதவதி, சிதம்பரநாதன் (கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லீலாவதி, பாலசுப்பிரமணியம் (கணக்காளர், ''லோட்டஸ்'' காமன்ஸ்), திவ்வியராணி (ஆசிரியை, வேம்படி மகளிர்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மீனலோஜனி, சர்வலோஜனி, பாலவள்ளி, பாலமுருகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் 6-11-84 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ''சரவணகிரி'', புன்னாலைக்கட்டுவன் வடக்கில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும் [592]

## மரண அறிவித்தல்
### க. சின்னத்தம்பி B. A. (Lond.)
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மகாஜனக்கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் க. சின்னத்தம்பி அவர்கள் காலமானார். அன்னார் உரும்பராயைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், திருமதி கண்மணி ராஜரத்தினத்தின் சகோதரரும், மகாஜனக்கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை திருமதி கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், காட்டர் டி கொஸ்ரா அன் கோ நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஜயன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி மிராளினி, அலுமெச்சி இன்டஸ்றிசைச் சேர்ந்த ஸ்ரீலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸாம்பியாவில் பணிபுரியும் கணக்காளர் ஆனந்தபாஸ்கரனின் மாமனுமாவார்.

இறுதிக்கிரியைகள் 6-ந் திகதி செவ்வாய்க்கிழமை (இன்று) பிற்பகல் 3 மணிக்கு கொல்லங்கலட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். (598)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Tephone 22389 - 24126.